ஸ்ரீ:

# ஸ்ரீ கருடபுராணம் மஹாத்மியமும்
# ஸ்ரீ அச்யுத ஸ்தோத்திரமும்



தொகுப்பு கருத்துரை

ஸ்ரீமதி விஷ்ணுப்ரியாசாரியார்

ஸ்ரீ:

# ஸ்ரீ கருடபுராணம் மஹாத்மியமும் ஸ்ரீ அச்யுத ஸ்தோத்திரமும்

<u>தொகுப்பு கருத்துரை</u>

**ஸ்ரீமதி விஷ்ணுபிரியாசாரியார்**




வெளியீடு



ஸ்ரீ லக்ஷ்மிஸரஸ் மாருதி

ஸ்ரீ லக்ஷ்மி ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்

ராமகிருஷ்ணா நகர், புதுச்சேரி - 1.

போன் : 0413 - 2260096

## முன்னுரை

ஆதிகாலத்தில் ஒரே ஒரு வேதம் மட்டுமே தான் இருந்ததாம். "வ்யாஸாய விஷ்ணு ரூபாய வ்யாஸ ரூபாய விஷ்ணவே" என்ற கூற்றிற்கிணங்க; வியாஸர் நான்கு வேதங்களாக, பிரம்ம ஸூத்ரங்களாக வகுத்தாராம். பதினென் புராணங்களை சிருஷ்டித்து நான் வேதங்கள், அவைதம் பொருள் உணர இயலாதார் உய்யும் வகை செய்தார். அவைகளுள் ஸாக்ஷாத் ஸ்ரீ வாஸுதேவனே கருடனுக்கு உபதேசித்தருளிய புராணம் "கருட புராணம்" எனப்பட்டது. ஸூதபுராணிகர் இதைக்கற்று சௌனகருக்கு உபதேசிக்கும் வகையில் இந்து மதத்தைச் சேர்ந்த நமக்குக் கிட்டி உள்ளது. எம்பெருமான் கருணைக்கும் விஞ்சிய பாபங்களை செய்தால் விளைவுகள் எவ்வித நரகானுபவமாக இருக்கும் என்பதையும், சில பிரேத கர்மாக்களையும் கடைசியில் ஒரு காண்டம் கூறுவதால் தம்தம் வீடுகளில் இந்த புராணத்தை வைப்பதோ பாராயணம் செய்வதோ கூடாது என்ற பரவலாக ஒரு அபிப்பராயம் நிலவுகிறது. அது தவறானது. ஒரு அத்தியாயம் பூராக ஸ்ரீ வாஸுதேவனே இந்த புராணத்தின் மகிமையை விவரித்து இருக்கிறார். நாம் மனதாலும் நினைக்கமுடியாத அதிசய மானபலன்களை இதன் பாராயணம் அளிக்க வல்லது. இதன் ஒரு ச்லோகம் அல்ல, ஒரு ச்லோகத்தின் ஒருவரி பாராயணம் செய்தாலும் அந்த கணமே மஹா பாவத்தை போக்க வல்லது. இந்த புத்தகம் உள்ள இடத்தில் எல்லா நலனும் தானே வந்தடையும். இதற்கான C.D. ல் மேலும் விவரங்கள் கூறியுள்ளேன்.

முக்கியமாக எம்பெருமானின் பரதத்வ நிலை அவரை தியானம் செய்வதில் மட்டுமே எல்லா நலனும் மோட்சமும், ஸகல புண்ணிய பலமும் கிட்டும் என விவரிக்கக்கூடிய 54 ச்லோகங்கள் "ஸ்ரீ விஷ்ணு மகாத்மியம்" என்கிற தலைப்பில் பொருளுரையுடன் வருகிறது. கலிகாலத்தில் சுலபமாக எளியோரும் பின்பற்றக் கூடிய "தர்ம சார கதனம்" கட்டுரை வடிவில் தரப்பட்டுள்ளது. கடைசியில் "ஸ்ரீ அச்யுத ஸ்தோத்திரம்" மிக அரியதான ஒரு ஸ்தோத்திரம் இகபர சுகங்களை அளித்து நம்மை காக்கும் பரமன் நம் வீடுகளிலும், திருக்கோயில்களிலும் செய்யக் கூடிய குறைகள் மிகுந்த பூஜையையும் உளமார ஏற்று மகிழ்கிறான் என்பதை இது தெரிவிக்கிறது. எம்பெருமான் பிரீதனானால் கிட்டாதது எது ?

இங்ஙனம்

ஸ்ரீமதி விஷ்ணுபிரியா சாரியார்



## ஸ்ரீ கருட புராணாந்தர்கத ஸ்ரீ விஷ்ணு மஹாத்ம்யம்

ஸ்ரீ ஸூத உவாச :-

1. ஆலோக்ய ஸர்வ சாஸ்த்ராணி விசார்ய ச புன : புன :
இதமேகம் ஸுநிஷ்பன்னம் த்யேயோ நாராயணஸ் ததா ॥

2. கிம் தஸ்ய தானை : கிம் தீர்த்தை : கிம் தபோபி : கிமத்வரை :
யோ நித்யம் த்யாயதே தேவம் நாராயணம் அனன்ய தீ : ॥

3. ஷஷ்டிர்தீர்த்த ஸஹஸ்ராணி ஷஷ்டிர்தீர்த்த சதானிச
நாராயண பிரணாமஸ்ய கலாம் நார்ஹந்தி ஷோடசீம் ॥

4. பிராயஸ்சித்தானசேஷாணி தப: கர்மாணி யானி வை
யானி யேஷாம் அசேஷானாம் கிருஷ்ணாநுஸ்மரணம் பரம் ॥

5. கிருத பாபேநுரக்தீச யஸ்ய பும்ஸ பிரஜாயதே
பிராயஸ்சித்தம் து தஸ்யைகம் ஹரே ஸம்ஸ்மரணம்பரம் ॥

6. முஹூர்த்தமபி யோ தியாயேத் நாராயணமதந்திரித :
ஸோபி ஸ்வர்கதி மாப்னோதி கிம் புனஸ்தத் பராயண : ॥

7. ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தேஷு யோகஸ்தஸ்யச் யோகின :
யாகாசிந் மனஸோ விருத்தி : பவத்யச்யுதாச்ரயா : ॥

8. உத்திஷ்டந் நிபதந் விஷ்ணும் பிரளயந் விசம்ஸ்ததா
புஞ்ஜந் ஜாக்ரஸ்ச கோவிந்தம் மாதவம் யஸ்ச ஸம்ஸ்மரேத் ॥

9. ஸ்வேஸ்வே கர்மண்யபிரத : குர்யாத் சித்தம் ஜநார்தனே
ஏஷா சாஸ்த்ரானுஸார உக்தி கிமன்யை பஹு பாஷிதை : ॥

10. த்யானமேவ பரோதர்மோ த்யானமேவ பரந்தம :
த்யானமேவ பரம் ஸௌசம் தஸ்மாந் த்யான பரோ பவேத் ॥

11. நாஸ்தி விஷ்ணோ பரம்த்யேயம் தபோ நாசனாத்பரம்
தஸ்மாந் பிரதான மத்ரோக்தம் வாஸுதேவஸ்ய சிந்தனம் ॥

12. யத் துர்லபம் பரமம் பிராப்யம் மனஸோ யந்ந கோசராத்
தப்ய பிரதிதம் தியாதோ ததாதி மதுஸூதன : ||

13. பிரமாதாத் குர்வதாம் பும்ஸாம் பிரச்ய வேதாத்வரேஷு கபத்
ஸ்மரணாதேவ தத்விஷ்ணோ : ஸம்பூர்ணம் ஸ்யாதிதி ச்ருதி : ||

14. த்யானேன ஸத்ருசம் நாஸ்தி சோதனம் பாபகர்மணாம்
ஆகாமி தேஹே ஹேதூனாம் தாஹகோ யோக பாவத : ||

15. விநிஷ்யன்ன ஸமாதிஸ்து முக்திமத்ரைவ ஜன்மநி
பிராப்னோதி யோகாக்னிதக்த கர்மா சயோ சிராத் ||

16. யதாக்னிருத்ய சிக : கக்ஷம் தஹதி வாநில :
ததா சித்தஸ்திதே விஷ்ணௌ யோகினாம் ஸர்வகில்பிஷம் ||

17. யதா பிரியோகத் கனக கமலம் ஸம்பிரஜாயதே
ஸம்ப்லுஷ்டோ வாஸுதேவேன மனுஷ்யாணாம் வதாமல : ||

18. கங்கா ஸ்னான ஸஹஸ்ரேஷு புஷ்கர ஸ்னான கோடிஷு
யத்பாபம் விலயம் யாதி ஸ்மிருதே நச்யதி தத்தரௌ ||

19. பிராணாயாம ஸஹஸ்ரைஸ்து யத்பாபம் நச்யதி த்ருவம்
க்ஷண மாத்ரேண தத்பாபம் ஹரே : த்யானாத் பிரணச்யதி ||

20. கலிபிரபாவோ துஷ்டோக்தி : பாஷண்டாணாம் ததோக்தய :
நகாமேந்மானஸம் தஸ்ய யஸ்ய சேதஸி கேசவ : ||

21. ஸா நிதிஸ் தததஹோராத்ரம் ஸயோக : ஸச சந்திரமா :
லக்னம் ததேவ விக்யாதம் யத்ர பிரஸ்மர்யதே ஹரி : ||

22. ஸா ஹானிஸ் நந் மஹாசித்ரம் ஸா சார்த்த ஜடமூஹதா :
யந் முஹூர்த்த க்ஷணேவாபி ந வாஸுதேவம் சிந்ததே : ||

23. கலௌ கிருத யுகஸ்தஸ்ய கலிஸ்தஸ் கிருதே யுகே
ஹ்ருதயே யஸ்ய கோவிந்தோ யஸ்ய சேதஸி நாச்யுத : ||



24. யஸ்யாக்ரதஸ்ததா பிருஷ்டே கச்சதஸ் திஷ்டதோபி வா
கோவிந்தே நியதம் சேத : கிருத கிருத்ய ஸதைவ : ஸ : ||

25. வாஸுதேவோ மனோயஸ்ய ஜபஹோமார்ச்னாதிஷு
தஸ்யாந்தராயோ தைத்ரேய தேவேந்த்ரதத் வாதிகம் பலம் ||

26. க்ஷமாம் குர்வந்தி குத்தேஷீ தயாம் மூர்க்கேஷு மானவ :
முதஸ்ச தர்ம கீலேஷு கோவிந்தே ஹ்ருதயஸ்திதே : ||

27. அஸத்யஜ்ய கார்ஹஸ்த்யம் திருப்திவா சமஹத்ய :
சினத்தி பௌருஷீம் மாயாம் கேசவார்ப்பித மானஸ : ||

28. தியாயேந் நாராயணம் தேவம் ஸ்னானதானாதி கர்மஸு
பிராயஸ்சித்தேஷு ஸர்வேஷீ துஷ்குருதேஷு விசேஷத : ||

29. லாபஸ்தேஷாம் ஜயஸ்தேஷாம் குதஸ்தேஷாம் பராபவ :
யேஷாம் இந்தீவரச்யாமோ ஹ்ருதயஸ்தோ ஜநார்தன : ||

30. கீடபஹி கணானாஞ்ச ஹரௌ ஸந்யஸ்த சேதஸாம்
ஊர்த்வா ஏவ கதிஸ் சாஸ்தி கிம் புனர்ஞானினாம்
நிருணாம் : ||

31. வாஸுதேவ தருச்சாயா ந அதிசீதாதிதாப தா
நரகத்வார சமனீ ஸாகிமர்த்த நாஸேவ்யதே ||

32. நச துர்வாஸ ஸ : சாபோ ராஜ்யஸ்சாபி சசீபதே :
ஹந்து ஸமர்த்த ஹி ஸகே ஹ்ருத்கிருதே மதுஸூதனே ||

33. வததஸ்திஷ்டதோந்யத்தா ஸ்வேச்சயா கர்மகுர்வத :
நாபயாதி யதா சிந்தா ஸித்தாமன்யேத தாரணாம் : ||

34. த்யேய : ஸதா ஸவித்ருமண்டல மத்யவர்த்தீ நாராயண
ஸரஸிஜாஸன ஸந்நிவிஷ்ட : |
கேயூரவாந் மகர குண்டலவாந் கிரீடிஹாரீ ஹிரண்மயவபு
த்ருத சங்க சக்ர : ||



35. நஹித்யாயேன ஸத்ருசம் பவித்ரமிஹ வித்யதே
ச்வபசாந்தானி புஞ்ஜானோ பாபி நையாத்ர லிப்யதே ! ||

36. ஸதாசித்தம் ஸபாஸிக்தம் ஜந்தோர் விஷய கோசரே
யதி நாராயணேப்யேவம் கோ ந முச்யேத பந்தநாத் : ||

<u>ஸூத உவாச :-</u>

37. விஷ்ணு பக்திர்யஸ்ய சித்தே கம் வா ஜீவோ நமேத்ஸதா
ஸதாரயதி சாத்மனாம் ததைவ துரிதார்ணவாத் ||

38. தத்ஜ்ஞானம் யத்ரகோவிந்த : ஸா கதா யத்ர கேசவ :
தத்கர்ம யத்ததர்த்தாய கிமன்யை : பஹு பாஷிதை : ||

39. ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி தச்சித்தம் யத்ததர்பிதம்
தாவேவ கேவலௌ ச்லாக்யௌ யௌ தத்பூஜா கரௌ ||

40. பிரணாம மீசஸ்ய சிர : பலம் விதுஸ்ததர்சனம்
மாணிபலம் திவௌகஸ :
மன : பலம் தத் குண கர்ம சிந்தனம் வசஸ்து கோவிந்த குண :
ஸ்துதி : பலம் ||

41. மேருமந்தார மாத்ரோபி ராசி பாபஸ்யகர்ம :
கேசவ ஸ்மரணாதேவ தஸ்ய ஸர்வம் விநச்யதி ||

42. யக்கிஞ்சித் குருதே கர்ம புருஷ : ஸாத்வஸாது வா
ஸர்வம் நாராயணேஷ்யஸ்ய குர்வந்தபின லிப்யதே ||

43. திருணாதி சதுராஸ்யாந்தம் பூத கிராமம் சதுர்விதம்
சராசரம் ஜகத்ஸர்வம் பிரஸுப்தம் மாயயா தவ ||

44. யஸ்மிந் நியஸ்ய மர்திந் யாதிநரகம் ஸ்வர்கேபி யச்சிந்தனே
விக்னோ யத்ர ந வேசிதாத்ம மனஸோ பிரம்மோபி லோகால்
பக : ||

45. முக்திஞ்சேதஸி ஸம்ஸ்திதோ ஜடதியாம் பும்ஸாம் ததாத்யவ்
யய :
கிஞ்சித்தம் யதயம் பிரயாதி விலயம் தத்ராச்யுதே கீர்த்திதே ||

46. அக்னி கார்ய ஜப : ஸ்நானம் விஷ்ணோர் தியானம்ச பூஜனம்
கந்தும் துக்கோ ததே : குர்யுர்யேச தத்ர தாந்திதே ||

47. யே நமந்தி ஜகத்யோனிம் வாஸுதேவம் ஸனாதனம்
த தேப்யோ வித்யதே தீர்த்தமதிகம் முனி ஸத்தம : ||

48. அனர்த்யரத்ன பூஜாஞ்ச கர்யாத் ஸ்வாத்யாய மேவச
தமே வோத்திச்ய கோவிந்தம் தியானம் நித்யமதந்திரித : ||

49. சூத்ரம் வா பகவத் பக்தம் நிஷாதம் ச்வபசம் ததா
த்விஜஜாதிம் ஸமம் மன்யே நயாரி நரகம் நர : ||

50. ஆதரேண ஸதாஸ்தௌதி தனவந்தம் தனேச்சயா
ததா விச்வஸ்ய கர்த்தராம் கோ நமுச்யேத பந்தநாத் ||

51. யதா ஜாதவனோ வஸ்நிர்தஹத் யார்த்ர மபீந்தனம்
தநா வித : ஸ்திதோ விஷ்ணுர்யோகினாம் ஸர்வகில்பிஷம் ||

52 ஆதீப்தம் பர்வதம் யத்வந்நாச்ரயந்தி மிருகாதய :
தத்தந் பாபானி ஸர்வானி யோகாப்யாஸாதோ நர : ||

53. யஸ்ய யாவம்ஸ்ச விச்வாஸஸ்தஸ்ய ஸத்திஸ்து தாவதி
ஏதாவானேவ கிருஷ்ணஸ்ய பிரபாவ : பரிமீய தே : ||

54. வித்வேஜதாதபி கோவிந்தம் தமகோஷாத்மஜ : ஸ்மரந்
சிசுபாலோ சுதஸ்தத்வம் கிம் புனஸ்தத்பராயண :

*இதிகாருடே மஹாபுராணே விஷ்ணுமாஹாத்ம்ய
கதம் நாம த்வாவிம்சாதிக த்விசததமோத்யாய :*

# ஸ்ரீ கருட புராணாந்தர்கத ஸ்ரீ விஷ்ணு மஹாத்ம்யம்

ஸ்ரீஸூத உவாச :

1. ஸகல சாஸ்திரங்களையும் பூராவுமாக ஆராய்ந்து மறுபடி மறுபடி சிந்தனை செய்து பார்த்தும் தேறும் ஒரே விஷயம் ஸ்ரீமந் நாராயணனை தியானம் செய் என்பதுவே ஆகும்.

2. என்ன விதமான தானம் செய்வது ?

   எந்த புண்ணிய தீர்த்தத்தில் நீராடுவது ?

   எந்த வித தவத்தை இயற்றுவது ?

   எந்த விதத்தில் ஈடுபாடு கொள்வது ?

   என்றெல்லாம் மனதை அலைபாய விடுவதைக் காட்டிலும் ஸ்ரீமந்நாராயணனை நோக்கி இருகரம் கூப்பி தம் தீனத்தன்மையை வெளிப்படுத்துவதும் ஒன்றே.

3. ஆயிரக்கணக்கான, நூற்றுக்கணக்கான புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதும் ஒரே முறை ஸ்ரீமந் நாராயணனை நோக்கி இருகரம் கூப்பி தம் தீனத்தன்மையை வெளிப்படுத்துவம் ஒன்றே.

4. எவ்வித குறையும் ஏற்படாமல் ஒரு பிராயச்சித்த கர்மாவை அனுசரிப்பதும், தவம் செய்வதும் கூட சில சமயம் அறியாத சில குறைகளை ஏற்படுத்தலாம்.

5. ஒருவருடைய மனது, பிறந்தது முதலே பாவச் செயல்களிலேயே ஈடுபட்டு இருந்து வந்தாலும் ஸ்ரீ ஹரியை மட்டும் ஸ்மரித்து வந்தால் அதுவே இணையற்ற பிராயச்சித்தமாகிறது.

6. ஒரு முகூர்த்தக்காலம் ஸ்ரீமந் நாராயணனுடைய திருமந்திரத்தை தியானிப்பவர் நற்கதி பெறுவார்கள் என்றால் ஏனைய விதமான பாராயணங்கள் செய்ய வேண்டிய அவசியமே ஏன் ஏற்படப் போகிறது ?



7. விழித்திருக்கும் போதும், தூங்கும்போதும்,உறக்க நிலையில் இருக்கின்றபோதும் கூட மனதால், தம்மை அண்டியவரைக் கைவிடாத பிரபுவாகிய, அச்யுதனை ஆச்ரயித்து வாழ்ந்தால் கடினமான யோக சாதனைகள் செய்யத் தேவையில்லை.

8. **எழுந்திருக்கும்போதும், இறங்கும் போதும், கேட்கத்தக்காத சொற்களைக் கேட்க நேரும் போதும், உறங்கும் போதும் விழித்திருக்கும் போதும், யாவற்றிற்கும் பரிகாரமாக விஷ்ணு, கோவிந்தன், மாதவன் என எம்பெருமானின் திருநாமங்களை உச்சரியுங்கள்.**

9. **தம் தம் கர்மாக்களில் ஈடுபட்டு எம்பெருமான் திருவுள்ள உவப்பிற்காகவே காரிய மாற்றும் பெரியோர் தமது சிந்தையை ஜநார்த்தனனிடம் வைப்பர். சாஸ்திர விதிப்படி இவ்வாறு உயர்த்த நடவடிக்கை உள்ளோரை வேறு என்னவென்று கூறி பாராட்டுவது ? அவர்கள் உத்தமர்.**

10. யாவற்றினும் உயர்த்த தர்மம் எவரோ, தியானத்தில் உயர்ந்த தியானம் எதுவோ, பரம சுத்தியை அருளும் தியானம் எதுவோ, அதுவே தியானங்களில் உயர்வற உயர்வான பரம்பொருளை ஸ்ரீமந்நாராயணனை தியானம் செய்யுங்கள்.

11. ஸ்ரீமந் நாராயணனிலும் உயரந்த தியானமில்லை. இந்த தியானத்திலும் உயர்ந்த தவமில்லை. வாஸுதேவனை நினைத்து, தியானித்து வருவதைக் காட்டிலும் உயர்ந்தது எதுவுமில்லை எனக் கூறுகிறேன். (ஸூத புராணிகர்கூறியது)

12. எந்த பரதத்வம் நம் கைப்பிடிக்கு அப்பாற்பட்டதோ எந்த பரதத்வம் நம் கண்பார்வைக்கு அப்பாற்பட்டதோ அந்த ஒப்புயர்வற்ற பரசக்தியாகிய மதுஸூதனன், தியானத்திற்கு உட்பட்டு நமக்கு அடையக் கூடியவனாகிறான்.

13. வேதங்களை பூரணமாக ஆராய்ந்து பார்க்குங்கால் எங்கும் விரவி,

முழுமையானதாக, முடிவானதாகத்தேறும் விஷயம், எங்கும் விரவி ஸர்வவியாபியாகத் திகழும் ஸ்ரீ விஷ்ணுவை தியானம் செய்ய வேண்டும் என்பதுவே ஆகும்.

14. பாவ கர்மாக்களின் தீயசக்தியை அலசி கழுவி நீக்கும் வல்லமை பெற்றது, ஸ்ரீ விஷ்ணு தியானமே. இல்லாவிடில் பிற்காலத்தில் எடுக்கக்கூடிய ஜன்மங்களில் தீய பலன்களைத் தரக்கூடியவையாக ஆத்மாக்களை அவை தாக்கி விடும்.

15. தியான யோகம் இயற்றும் யோகி, தம் யோகாக்னியால் மறுபிறவி அளிக்கக்கூடிய காரணங்களை, கர்மாக்களை அப்போதே சாம்பலாக எரித்து விடுகிறார்.

16. பலமான காற்றின் மகிமையால் நெருப்பு உயரக்கிளம்பி, ஆட்பட்ட கட்டிடத்தைக் கூட எப்படி எரித்து விடுகிறதா அது போல, யோகியின் மனதில் வசிக்கும் மஹாவிஷ்ணு அவரது ஸகல பாபங்களையும் நசித்து விடுகிறார்.

17. தங்கத்தில் இருக்கக்கூடிய அழுக்கானது நெருப்பால் சுத்திகரிக்கப்படுவது போல, மனிதனின் மனதில் உள்ள அழுக்கு ஸ்ரீ வாஸுதேவனின் ஸாந்நித்யத்தால் நஷ்டமாகின்றன.

18. ஆயிரம் முறை கங்கையில் ஸ்நானம் செய்வது கோடி முறை புஷ்கர தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வது எவ்வளவு கொடியதான பாவங்களை விலக்குமோ அவை எம்பெருமானை ஸ்மரிப்பதாலேயே நசிக்கப்பட்டு விடும்.

19. ஆயிரம் முறை பிராணாயாமம் செய்து விலக்க வேண்டிய பாவச் செய்கையானது ஸ்ரீ ஹரியை தியானிப்பதால் கணநேரத்தில் நாசமாகி விடும்.

20.எவருடைய மனதில் ஸ்ரீ கேசவன் வசிக்கிறானோ அவனுடைய மனதில் துஷ்டர்களின் பேச்சு பாஷண்டிகளின் பேச்சு இவை ஏறாது.



இவை கலிபிரபாவத்தால் வருபவை. ஸ்ரீ கேசவன் தங்குமிடத்தில் இவை அணுக மாட்டா.

21. எந்த நேரத்தில் ஸ்ரீ ஹரியை ஒருவன் தியானிக்கிறானோ, அதே கணம், திதி, பகல், இரவு சுபயோகம், சந்திரபலம், சுபலக்னம் இவையாவும் அடங்கியதான ஸர்வ சிரேஷ்ட நேரமாகும்.

22.வாசுதேவனைதியானிக்காமல் இருக்கக்கூடிய முகூர்த்தம், இந்த குறைபாடு காரணமாக, கணநேரத்தில் கேடு விளைவிக்கக்கூடிய லக்கினமாக மாறி விடுகிறது.

23.எவனுடைய இதயத்தில் ஸ்ரீ கோவிந்தன் வசிக்கிறானோ அவனுக்குக் கலியுகமும் கிருதயுகமாகி விடுகிறது. அதனாலேயே ஸதா காலமும் கோவிந்தனை நினையுங்கள். அச்யுதனை ஸ்மரியுங்கள்.

24.எவனுடைய மனம் முன்னும், பின்னும் செல்லும்போதும், உட்கார்த்திருக்கும் போதும் கோவிந்தனையே தியானித்து வருகிறதோ அவன் கிருத கிருத்யனாகிறான்.

25.எவனுடைய சித்தம் ஸ்ரீ கிருஷ்ணனை ஆராதிப்பதில் லயித்திருக்கிறதோ, ஜபம், ஹோமம், இத்யாதி உயர்ந்த செய்கைகளில் ஈடுபடுகிறதோ அதுக்கு இந்திரபதவி கூட துச்சமானதாக தெரிய வரும்.

26.கோவிந்தா ! தாமோதரா ! என்று எம்பெருமானை நினைத்து உருகும் மனமுள்ளவன் கோபக்காரர்களிடம் பொறுமையும், முட்டாள்களிடம் கருணையும், தர்மத்தில் ஈடுபட்டவனாகவும் இருப்பான்.

27.கிருஹஸ்த தர்மத்தினின்று விலகி தவம், மஹாதவம் இவற்றை செய்து ஏற்படக்கூடிய திருப்தியானது கேசவனிடம் மனதை அர்ப்பணம் செய்து, எளியவனாக இருத்தல், சிறந்த வீரத்திற்கு ஒப்பாகும்.



28.தீர்த்த ஸ்நானம், தானம் போன்ற கர்மாக்களை பிரயஸ்சித்த நிமித்தமாக செய்யும்போது ஸ்ரீமந் நாராயணனை ஸ்மரணம் செய்தல் அவசியம்.

29.எவனுடைய இருதய கமலத்தில் நீலத்தாமரை போன்ற அழகிய சியாமள நிறத்தானாகிய ஸ்ரீ ஹரி தங்கி இருப்பாரோ, அவனுக்கு எப்போதும் எல்லாவற்றிலும் லாபம், வெற்றி இவை ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.அவனுக்கு அபஜயம் என்பதே கிடையாது.

30.தம் இதயத்தில் ஸ்ரீ ஹரியை நினைக்கும் புழு பூச்சிகள், பறவைகள் இதர ஜந்துக்களும் கூட உத்தம கதியை அடைகின்றன என்னும்போது ஹரி ஸ்மரணம் செய்யும் மனிதர்களைப் பற்றி சொல்ல என்ன இருக்கிறது ?

31. ஸ்ரீ வாசுதேவன் எனும் மரத்தின் நிழல் அதிக சூடானதுமல்ல, சீதளமானதும் அல்ல. அது ஜீவன் நரக வாயிலை அடையாதவாறு தடுக்கும் சக்தி பெற்றது. இத்தகைய நிழலில் நாம் ஏன் ஒதுங்கக் கூடாது ?

32.எப்போதும் தமது இதயத்தில் மதுஸூதனனை நிறுத்தி இருப்பவனை, துர்வாஸர் போன்ற கோபிஷ்ட ரிஷியின் சாபமோ, தேவேந்திரனுடைய அரசாங்க ஆணைகளோ, எவ்வித தீமைக்கும் ஆட்படுத்தி விடமுடியாது.

33.பேசும் போதும், பேசுவதை நிறுத்தும்போதும் ஏனைய பிற காரியங்களைச் செய்து வரும்போதும் எப்போதும் மனம் மட்டும் எம்பெருமானிடம் லயித்திருக்குமானால் அந்த உத்தம புருஷன் ஸித்த புருஷனாகிறான்.

34.சூரிய மண்டலத்தின் நடுவில் தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் பரமன், கேயூர, மகர குண்டலங்கள், ஹாரம், கிரீடம் இவைகளை அணிந்து நமது தங்கமயமான தேஜஸால் சேதரனர்களின் மனதை



அபகரிக்கக்கூடிய சங்க சக்ரதாரியை எப்போதும் மனதில் தியானிக்க வேண்டும்.

35.எம்பெருமானை தியானிப்பதற்கு ஈடான பவித்ரமான காரியம் இவ்வுலகில் இல்லை. எம்பெருமானுடனேயே தன்மயப்பட்ட ஜீவன் சண்டாளன் ஈன்ற உணவை உட்கொண்டால் கூட அந்த பாவம் அவனை அண்டாது. ஏனெனில் பகவானிடமே லயித்த அவன் ஆத்மா இவ்வுலக மாசு பட்டு மாறுவதில்லை.

36.விஷய சுகங்களில் எப்போதும் லயித்து அல்லல்படும் ஆத்மா எம்பெருமானின் குணாநுபவத்திலேயே அதுபோல லயித்திருக்குமானால் சம்சார பந்தத்திலிருந்து ஏன் விடுபடாது ?

37.ஸதாகாலமும் ஸ்ரீ ஹரியை ஸ்மரணம் செய்பவன் அவரை நமஸ்கரிக்கின்றான். இந்நிலையில் இருப்பவன் ஸ்ரீஹரியின் கருணையால் பாவக் கடலினின்று மீண்டு கரை சேர்கிறான்.

38.எங்கு கோவிந்தனை தியானிக்கிறார்களோ எங்கு கேசவனின் மகிமை பேசப்படுகிறதோ எம்பெருமானுக்காக கைங்கரியம் எங்கு செய்யப்படுகிறதோ, அவ்விடத்தில் ஏனைய விஷயங்களைப் பற்றி கூற என்ன உள்ளது ?

39.ஸ்ரீ ஹரியை துதிக்கும் நாக்கே, நாக்கு எனப்படும். எந்த மனது ஸ்ரீ ஹரி திருவடிகளில் ஸமர்பிக்கப்பட்டதோ அதுவே மனம். பகவானை பூஜிப்பதில் எந்த கைகள் ஈடுபடுகின்றனவோ அவைகளே கைகள்.

40.ஒருவனுடைய சிரஸ் பயனுள்ளதாக எம்பெருமானை நோக்கி வணங்குதல் வேண்டும். கைகளின் பயன் அவருக்கு பூஜை செய்தல், வாக்கு பயன்பெற எம்பெருமானின் குணங்களை திவ்ய சேஷ்டிதங்களை வர்ணிப்பதாகும். கோவிந்தனின் குணகீர்த்தனை செய்யுங்கள்.

41 .மேரு மந்திர மலையொத்த அளவான பாபகர்மங்களை ஒருவன்

செய்திருந்தாலும் ஸ்ரீ கேசவனை ஸ்மரித்த மாத்திரத்திலேயே ஸகலமும் நசித்து விடுகின்றன.

42.ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் திருவடிகளில் யதேச்சையாக பூர்ணமான ஈடுபாடோ, தத்வஞானமோ இல்லாமல் கூட தான் செய்யும் கர்மங்களை ஒருவன் ஸமர்ப்பணம் செய்வானேயானால் அக்கர்மங்கள் ஸாத்வீகமானவையாகவே இருக்கும். பந்தனத்தை உண்டுபண்பவையாக இருக்க மாட்டா.

43.தேவ, தானவ, மானிட, அசைவற்ற.அசையும் பேதங்களுக்கு உட்பட்ட ஸமஸ்தமான உலகங்கள் அவை சேர்ந்தவை, யாவுமே விஷ்ணு மாயைக்கு உட்பட்டவை.

44.எம்பெருமானிடம் மனம் லயித்த ஜீவன் நரகம் புகாது. அவரைப் பற்றிய சிந்தனை சொர்க போகத்திற்கு ஸமமாக சுகத்தை அளிக்கும் அக்னி பிழம்பை உமிழும் மலையிடம் மிருக, பறவை இனங்கள் எப்படி புகலிடமாகக் கொள்ளாதோ அதே போல் யோகாப்பியாஸம் செய்யும் மகான்களை பாவங்கள் அணுகமாட்டா. ஸ்ரீ அச்யுதனிடம் முழு நம்பிக்கை எந்த ஜீவனுக்கு ஏற்படுகிறதோ, அவனுக்கு அந்த மாறாத அசஞ்சலமான நம்பிக்கையே வெற்றியை அளிக்கிறது. மோஷமே அளிக்கின்றது.

45.துக்க ஸாகரத்தில் முழுகி தவிக்கும் இவன் கரையேற விஷ்ணு தியானமும் பூஜையுமே கை கொடுக்கும். ஹோமம், ஜபம் தீர்த்த ஸ்னானம் போன்ற புண்ணிய கர்மங்கள் விஷ்ணு தியானத்துடன் இணைந்து கரைசேர்ந்து விடும்.

46.ஒரு தேசத்திற்கு தலைவன் அரசன். பாலகனுக்கு தன் தகப்பன் தலைவனாகிறான். தர்மார்த்த புருஷார்த்தம் யாவினுக்கும் சரணாகப் பற்ற வேண்டிய ஒரே தலைவன் ஸ்ரீ ஹரியே ஆகும்.

47.இவ்வுலகில் ஜனித்த எந்த ஜீவனுக்கும் வணக்கத்திற்குரிய



தலைவன் ஸ்ரீ வாஸுதேவனே ! முனி புங்கவர்களுக்கும், இதனை விட உயர்ந்ததாக தீர்த்த ஸ்னானம் கூட ஆக முடியாது.

48.விலைமதிப்பற்ற ரத்தினங்களைக் கொண்டு படாடோபமான பூஜனம், ஸ்வாத்யாயம் இன்னும்பிற மார்கங்களில் பூஜிப்பதைவிட கோவிந்தனை மனதார தியானிப்பது தினமும் பயனளிக்க வல்லது.

49.பகவத் பக்தி உள்ள ஒருவன், சூத்ரன், வேடன் பஞ்சம வர்ணத்தவன், பிராம்மணன் என்கிற பாகுபாடு எதுவும் இன்றி நரகவாயிலை அண்டுவதே இல்லை.

50.ஆதங்கத்துடன் எக்காலமும் மஹாவிஷ்ணுவை துதிப்பவன், மஹா விச்வாஸ முற்றவன். இந்த விதமான உயர்ந்த தனத்தைப் பெற்ற தனவான் பந்தங்களினின்று விடுபடுகின்றான்.

51.நெருப்பில் இடப்பட்ட காய்ந்த இலை அல்லது தர்ப்பை கணநேரத்தில் கொளுத்தப்பட்டு விடுவது போல, யோகிகளின் பகவத் தியானத்தால் பாவங்கள் தீயினில் தூசாகின்றன.

52.எரிமலையை நாடி மிருகங்கள் எப்படி ஆச்ரயிப்பதில்லையோ அதுபோல, யோகாப்யாஸம் செய்யும் புண்ணியசாலிகளிடம் பாப கர்மங்கள் அண்டுவதில்லை.

53.ஸ்ரீ கிருஷ்ண பக்தியின் பிரபாவத்தால், முழு பக்தியின் பலனாக தன்னிச்சையாக ஏற்படும் ஸித்தி, தானே நாடி வரும்.

54.எம்பெருமான் ஸ்ரீ கிருஷ்ணனின் மகிமையை, சத்ரு பாவத்தால் தியானம் செய்த சிசுபாலன் கண்ணனின் திருவடியில் மோட்சம் பெற்றான். ஒருவன் பக்தி பாவத்தால் கண்ணனின் பிரபாவத்தில் லயித்து இருப்பானாகில் அவன் விஷயமாகக் கூற என்ன இருக்கிறது. மோக்ஷம் நிச்சயமாகிறது.



## ஸ்ரீ கருட புராணம் 221 அத்தியாயம்
## தர்மஸார கதனம்

ஸ்ரீ பிரம்மா கூறுகிறார் :-

ஹே சங்கர ! இப்போது ஸகல விதமான பாவங்களையும் நசித்து போகம், மோக்ஷம் இரண்டுமே அளிக்கக்கூடிய சூட்சுமமான தர்மஸாரம் பற்றி தங்களுக்குக் கூறுகிறேன்.

ஒவனுக்கு ஏற்படக்கூடிய சோகமானது சாஸ்திர அறிவு, தர்மம், பலம், தைரியம், சுகம், சுறுசுறுப்பு இவையாவையும் போக்கி விடுகிறது. சோகத்தால் ஸகலவித ஸாத்விகமான குணங்களும் கூட போய் விடுகிறது. அதனால் சோகத்தைத் தவிர்க்க வேண்டும்.

இவ்வுலக போகங்கள், சுற்றம் யாவுமே பூர்வத்தில் செய்த கர்மாவை அனுசரித்தே அமைகின்றன. அதனால் எப்போதும் நற்காரியங்களைச் செய்வதிலேயே ஈடுபடவேண்டும். தானம் செய்வது நற்காரியங்களில் மிகச் சிறந்த ஒன்றாகும். தானம் உயர்பலன்களை அளிக்க வல்லது. பதவி சொர்கம் ராஜ்ஜியம் போன்றவை.

சாஸ்திரவிதிப்படி தக்ஷிணை இவைகளுடன் கூடிய தானம் செய்வதும், பயந்து நலிந்து நிற்கும் ஒரு உயிரைக் காப்பாற்றுவதும் சமானமாகும். தவனம் பிரம்மச்சரியம், பலவித யாகங்கள், புண்ணியம் தீர்த்த ஸ்னானம் இவற்றுக்கெல்லாம் கிட்டக்கூடிய பலன்கள், பயந்த ஒரு உயிரை காப்பாற்றுவதால் ஏற்பட்டுவிடும். இவ்வித தர்மத்தை அனுசரிக்காதவன் நரகம் புகுகிறான்.

ஹோமம், ஜபம், ஸ்னானம், தேவபூஜை இவற்றில் ஈடுபடுபவன் ஸ்வர்க லோகம் புகுகிறான். இவன் உண்மை, மன்னித்துவிடும் சுபாவம், கருணை முதலிய நற்குணங்கள் நிரம்பியவனாயிருப்பான்.



எந்த ஒரு தனி நபரும் யாருக்கும் சுகமோ, துக்கமோ அளித்து விட முடியாது. அவரவர் புண்ணிய பாப கர்மங்களை அனுசரித்தே சுகமோ, துக்கமோ அடைகிறார்கள்.

தர்மத்தைக் காப்பதற்காக ஒரு உயிரைக் காப்பவன் ஸகல வித கஷ்டங்களையும், சோதனைகளையும் தாண்டிவிடுகிறான். வெறும் பழம், மூலிகை, கிழங்கு இவைகளை புசித்து வரும் எளியவன் ஆகினும் புத்தியானது மனமானது தூய்மையானதாக இருக்குமானால் மிக உயர்ந்த மகிழ்ச்சியை அடைபவனாகிறான்.

சுகத்தை அடையும் நோக்கத்துடன் ஒருவன் கோபத்தை உண்டாக்கும் பேராசை காரணமாக அடுத்தவரை துன்புறுத்த முற்படுகிறான். மாயை, கர்வம், இச்சை, வெறுப்பு, பொய்யே பேசுவது, இழிவான செயல்களில் ஈடுபடுவது போன்ற தீய வழிகளில் அவன் செல்லத் தொடங்குகிறான். பேராசையை விட்டு கிடைத்ததில் திருப்தி கண்டு அமைதியாக இருப்பவன் பாவங்களினின்று விடுபட்டு மோக்ஷானந்தம் பெறுகிறான். ஹே மஹாதேவா ! இப்படிப்பட்ட தர்மத்தை அனுசரிக்கும் ஒருவனை தேவர்கள், முனிவர்கள் நாக, கந்தர்வ, யக்ஷ புருஷர்கள் வணங்குகிறார்கள். பணப்பேராசை கொண்ட காமியமனமுள்ளவனை யாரும் மதிப்பதே இல்லை.

அளவற்ற பலம், அறிவு, வீரியம், பௌருஷம் ஆகிய சக்திகளால் ஒருவன் ஒரு உயர்ந்த நிலையை அடைந்தால் அவனைக் கண்டு பொறாமையோ, வருத்தமோ அடைதல் கூடாது. எல்லா உயிரிடமும் கருணை, இந்திரியங்களை வசப்படுத்துதல், நிலையாமை உணர்ந்திருத்தல் ஆகிய நற்குணங்கள் சிரேயஸ் தருபவை. மரணம் எதிர்நோக்கி இருப்பதை உணர்ந்து தர்மத்திலேயே நாடிய மனம் இல்லாது இருப்பவன் ஆடு தன் கழுத்தில் தாங்கும் அஜாகளஸ்தம் போன்ற பயனற்ற வாழ்வு வாழ்கிறான்.

இவ்வுலகில் கோதானம் என்ற பசுவை தானமாகத் தருவது உயர்ந்த தர்மம். தான் உழைத்து நேர்மையாக ஸம்பாதித்த தனம் கொண்டு வாங்கிய பசுவை தானமாகத் தருபவன் தமது குலத்தையே காத்தவன் ஆகிறான்.

ரிஷபத்தை வாகனமாகக் கொண்ட ஈச்வரனே கூறுவது தானத்தில் மிகச் சிறந்தது அன்னதானமே. ஏனெனில் உலகம் முழுவதுமாகிய உயிர்களைக் காப்பது அன்னமே. கன்னிகாதானம், பசுதானம், ஜபம், தீர்த்த ஸ்னானம், வேதாத்யானம், யானை, குதிரை, ரத தானங்கள், ரத்தின தானம் இவையாவும் அன்னதானத்தின் பதினாறில் ஒரு பங்கு (1 / 16) கூட மதிமை உள்ளது ஆகாது. அன்னம்தான் மனிதனுக்கு உயிர் பலம், தேஜஸ், வீரியம், தைரியம், நினைவு இவையெல்லாம் அளிக்கின்றது. எவன் ஒருவன் எனைய மக்களின் சுகத்திற்காக கிணறு, தோட்டம், தடாகம் இவைகளை நிர்மாணிக்கிறானோ அவன் இருபத்தியெரு தலைமுறைகளைக் காப்பவன் ஆகிறான். கடைசியில் தான் விஷ்ணுலோகத்தை அடைகிறான்.

சாதுக்களை, நல்மனம் கொண்டோரை தரிசிப்பது ஆச்சரியகரமான புண்ணிய பலனைத் தருவதாகும். புண்ணிய தீர்த்த ஸ்நானம் குறிப்பிட்ட காலம் வரும்போது பயனளிக்கும். சாதுக்களின் தரிசனம் உடனே பயனளித்து விடும்.

உண்மை, தவம், சுத்தம், சந்தோஷம், பொறுமை, எளிமை, ஞானம், சமபுத்தி, கருணை, தானம் இவையாவும் தான் ஸனாதனதர்மம் எனப்படும்.



## अच्युतस्तोत्र

ॐ नमो [ भगवते ] वासुदेवाय नमः सर्वाघहारिणे।
नमो विशुद्धदेहाय नमो ज्ञानस्वरूपिणे॥
नमः सर्वसुरेशाय नमः श्रीवत्सधारिणे।
नमश्चर्मासिहस्ताय नमः पङ्कजमालिने॥
नमो विश्वप्रतिष्ठाय नमः पीताम्बराय च।
नमो नृसिंहरूपाय वैकुण्ठाय नमो नमः॥
नमः पङ्कजनाभाय नमः क्षीरोदशायिने।
नमः सहस्रशीर्षाय नमो नागाङ्गशायिने॥
नमः परशुहस्ताय नमः क्षत्रान्तकारिणे।
नमः सत्यप्रतिज्ञाय ह्यजिताय नमो नमः॥
नमस्त्रैलोक्यनाथाय नमश्चक्रधराय च।
नमः शिवाय सूक्ष्माय पुराणाय नमो नमः॥
नमो वामनरूपाय बलिराज्यापहारिणे।
नमो यज्ञवराहाय गोविन्दाय नमो नमः॥
नमस्ते परमानन्द नमस्ते परमाक्षर।
नमस्ते ज्ञानसद्भाव नमस्ते ज्ञानदायक॥
नमस्ते परमाद्वैत नमस्ते पुरुषोत्तम।
नमस्ते विश्वकृद्देव नमस्ते विश्वभावन॥
नमस्ते स्ताद् विश्वनाथ नमस्ते विश्वकारण।
नमस्ते मधुदैत्यघ्न नमस्ते रावणान्तक॥
नमस्ते कंसकेशिघ्न नमस्ते कैटभार्दन।
नमस्ते शतपत्राक्ष नमस्ते गरुडध्वज॥
नमस्ते कालनेमिघ्न नमस्ते गरुडासन।
नमस्ते देवकीपुत्र नमस्ते वृष्णिनन्दन॥
नमस्ते रुक्मिणीकान्त नमस्तेऽदितिनन्दन।
नमस्ते गोकुलावास नमस्ते गोकुलप्रिय॥
जय गोपवपुः कृष्ण जय गोपीजनप्रिय।
जय गोवर्धनाधार जय गोकुलवर्धन॥
जय रावणवीरघ्न जय चाणूरनाशन।
जय वृष्णिकुलोद्योत जय कालीयमर्दन॥
जय सत्य जगत्साक्षिन् जय सर्वार्थसाधक।
जय वेदान्तविद्वेद्य जय सर्वद माधव॥
जय सर्वाश्रयाव्यक्त जय सर्वग माधव।
जय सूक्ष्म चिदानन्द जय चित्तनिरञ्जन॥
जयस्तेऽस्तु निरालम्ब जय शान्त सनातन।
जय नाथ जगत्पुष्ट( पून्य )जय विष्णो नमोऽस्तु ते॥
त्वं गुरुस्त्वं हरे शिष्यस्त्वं दीक्षामन्त्रमण्डलम्।
त्वं न्यासमुद्रासमयास्त्वं च पुष्पादिसाधनम्॥
त्वमाधारस्त्वं ह्यनन्तस्त्वं कूर्मस्त्वं धराम्बुजम्।
धर्मज्ञानादयस्त्वं हि वेदिमण्डलशक्तयः॥
त्वं प्रभो छलभृद्रामस्त्वं पुनः स खरान्तकः।
त्वं ब्रह्मर्षिश्च देवस्त्वं विष्णुः सत्यपराक्रमः॥
त्वं नृसिंहः परानन्दो वराहस्त्वं धराधरः।
त्वं सुपर्णस्तथा चक्रं त्वं गदा शङ्ख एव च॥
त्वं श्रीः प्रभो त्वं पुष्टिस्त्वं त्वं माला देव शाश्वती।
श्रीवत्सः कौस्तुभस्त्वं हि शार्ङ्गी त्वं च तथेषुधिः॥
त्वं खड्गचर्मणा सार्धं त्वं दिक्पालास्तथा प्रभो।



त्वं वेधास्त्वं विधाता च त्वं यमस्त्वं हुताशनः॥
त्वं धनेशस्त्वमीशानस्त्वमिन्द्रस्त्वमपाम्पतिः।
त्वं रक्षोऽधिपतिः साध्यस्त्वं वायुस्त्वं निशाकरः॥
आदित्या वसवो रुद्रा अश्विनौ त्वं मरुद्गणाः।
त्वं दैत्या दानवा नागास्त्वं यक्षा राक्षसाः खगाः॥
गन्धर्वाप्सरसः सिद्धाः पितरस्त्वं महामराः।
भूतानि विषयस्त्वं हि त्वमव्यक्तेन्द्रियाणि च॥
मनोबुद्धिरहङ्कारः क्षेत्रज्ञस्त्वं हृदीश्वरः।
त्वं यज्ञस्त्वं वषट्कारस्त्वमोङ्कारः समित्कुशाः॥
त्वं वेदी त्वं हरे दीक्षा त्वं यूपस्त्वं हुताशनः।
त्वं पत्नी त्वं पुरोडाशस्त्वं शाला स्रुक् च त्वं स्रुवः॥
ग्रावाणः सकलं त्वं हि सदस्यस्त्वं सदक्षिणः।
त्वं शूर्पादिस्त्वं च ब्रह्मा मुसलोलूखले ध्रुवम्॥
त्वं होता यजमानस्त्वं त्वं धान्यं पशुयाजकः।
त्वमध्वर्युस्त्वमुद्गाता त्वं यज्ञः पुरुषोत्तमः॥
दिक्पातालमहि व्योम द्यौस्त्वं नक्षत्रकारकः।
देवतिर्यङ्मनुष्येषु जगदेतच्चराचरम्॥
यत्किंचिद् दृश्यते देव ब्रह्माण्डमखिलं जगत्।
तव रूपमिदं सर्वं सृष्ट्यर्थं सम्प्रकाशितम्॥
नाथयन्ते परं ब्रह्म देवैरपि दुरासदम्।
कस्त्वां जानाति विमलं योगगम्यमतीन्द्रियम्॥
अक्षयं पुरुषं नित्यमव्यक्तमजमव्ययम्।
प्रलयोत्पत्तिरहितं सर्वव्यापिनमीश्वरम्॥
सर्वज्ञं निर्गुणं शुद्धमानन्दमजरं परम्।
बोधरूपं ध्रुवं शान्तं पूर्णमद्वैतमक्षरम्॥
अवतारेषु या मूर्तिर्विदूरे देव दृश्यते।
पर भावमजानन्तस्त्वा भजन्ति दिवौकसः॥
कथं त्वामीदृशं सूक्ष्मं शक्नोमि पुरुषोत्तम।
आराधयितुमीशान मनोऽगम्यमगोचरम्॥
इह यन्मण्डले नाथ पूज्यते विधिवत् क्रमैः।
पुष्पधूपादिभिर्यत्र तत्र सर्वा विभूतयः॥
सङ्कर्षणादिभेदेन तव यत्पूजितं मया।
क्षन्तुमर्हसि तत्सर्वं यत्कृतं न कृतं मया॥
न शक्नोमि विभो सम्यक् कर्तुं पूजां यथोदिताम्।
यत्कृतं जपहोमादि असाध्यं पुरुषोत्तम॥
विनिष्पादयितुं भक्त्या अतस्त्वां क्षमयाम्यहम्।
दिवा रात्रौ च सन्ध्यायां सर्वावस्थासु चेष्टतः॥
अचला तु हरे भक्तिस्तवाङ्घ्रियुगले मम।
शरीरे न ( ण ) तथा प्रीतिर्न च धर्मादिकेषु च॥
यथा त्वयि जगन्नाथ प्रीतिरात्यन्तिकी मम।
किं तेन न कृतं कर्म स्वर्गमोक्षादिसाधनम्॥
यस्य विष्णौ दृढा भक्तिः सर्वकामफलप्रदे।
पूजां कर्तुं तथा स्तोत्रं कः शक्नोति तवाच्युत॥
स्तुतं च पूजितं मेऽद्य तत् क्षमस्व नमोऽस्तु ते।





## ஸ்ரீ கருட புராணத்தைச் சேர்ந்த ஸ்ரீ அச்யுத ஸ்தோத்திரம்

### அத்தியாயம் 234

1. ஓம் நமோ பகவதே வாஸுதேவாய நம : ஸர்வாகஹாரிணே
நமோ விசுத்த தேஹாய நமோ ஞான ஸ்வரூபிணே ||
2. நமோ ஸர்வஸுரேசாய நம : ஸ்ரீவத்ஸ தாரிணே ।
நம : சர்மாஸி ஹஸ்தாய நம : பங்கஜ மாலினே ||
3. நமோ விச்வ பிரதிஷ்டாய நமோ பீதாம்பராயச ।
நமோ நிருஸிம்ஹரூபாய வைகுண்டாய நமோ நம : ||
4. நம : பங்கஜநாபாய நம : க்ஷீரோதசாயினே ।
நம : ஸஹஸ்ர சீர்ஷாய நமோ நாகாங்க சாயினே ||
5. நம : பரசுஹஸ்தாய நம : க்ஷத்ராந்த காரிணே ।
நம : ஸத்ய பிரதிஞ்ஞாய ஹி அஜிதாய நமோ நம : ||
6. நம : த்ரைலோக்யநாதாய நம : சக்ர தராய ச ।
நம : சிவாய ஸூக்ஷ்மாய புராணாய நமோ நம : ||
7. நமோ வாமன ரூபாய பலிராஜ்யாப ஹாரிணே ।
நமோ யஞ்ஞ வராஹாய கோவிந்தாய நமோ நம : ||
8. நமஸ்தே பரமானந்த நமஸ்தே பரமாக்ஷர ।
நமஸ்தே ஞானஸத்பாவ நமஸ்தே ஞானதாயக ||
9. நமஸ்தே பரமாத்வைத நமஸ்தே புருஷோத்தம ।
நமஸ்தே விச்வ கிருத்தேவ நமஸ்தே விச்வபாவன ||
10. நமஸ்தேஸ்தாத் விச்வநா தம்நமஸ்தே விச்வகாரண ।
நமஸ்தே மதுதைத்யக்ன நமஸ்தே ராவணாந்தக ||
11. நமஸ்தே கம்ஸகேசிக்ன நமஸ்தே கைடபார்தன ।
நமஸ்தே சதபத்ராக்ஷ நமஸ்தே கருடத்வஜ ||

12. நமஸ்தே காலநேமிக்ன நமஸ்தே கருடாஸன ।
நமஸ்தே தேவகீபுத்ர நமஸ்தே வ்ருஷ்ணிநந்தன ॥

13. நமஸ்தே ருக்மிணிகாந்த நமஸ்தே திதிநந்தன ।
நமஸ்தே கோகுலவாஸ நமஸ்தே கோகுலபிரிய ॥

14. ஜயகோப வபு : கிருஷ்ண ஜய கோபிஜனபிரிய ।
ஜய கோவர்தனாதார ஜய கோகுல வர்தன ॥

15. ஜய ராவண வீரக்ன ஜய சாணூர நாசன ।
ஜய வ்ருஷ்ணீ குலோத்யோத ஜய காளீய மர்தன ॥

16. ஜய ஸத்ய ஜகத்ஸாக்ஷித் ஜய ஸர்வார்த்த தாயக ।
ஜய வேதாந்த வித்வேத்ய ஜய ஸர்வத மாதவ ॥

17. ஜய ஸர்வாச்ரயாவ்யக்த ஜய ஸர்வக மாதவ ।
ஜய ஸூக்ஷ்ம சிதானந்த ஜய சித்த நிரஞ்ஜன ॥

18. ஜயஸ்தேஸ்து நிராலம்ப ஜய சாந்த ஸனாதன ।
ஜயநாத ஜகத்புஷ்ட ஜய விஷ்ணோ நமோஸ்துதே ॥

19. த்வம் குருஸ்த்வம் த்வம் சிஷ்யஸ்த்வம் தீக்ஷாமந்த்ர மண்டலம் ।
த்வம் நியாஸமுத்ரா ஸமாயாஸ்த்வம் ச புஷ்பாதி ஸாதனம் ॥

20. த்வாம் ஆதாரஸ்த்வம் ஹி அனந்தஸ்த்வம் கூர்மஸ்த்வம் தராம்புஜம் ।
தர்ம ஞான தயஸ்த்வம் ஹி வேதி மண்டல சகிதய : ॥

21. த்வம் பிரபோ சலபத்ராமஸ்த்வம் புன : ஸ கராந்தக : ।
த்வம் ப்ரஹ்மர்ஷிஸ்ச தேவஸ்த்வம் விஷ்ணு : ஸத்யபராக்ரம் ॥

22. த்வம் நிருஸிம்ஹ பரானந்தோ வராஹஸ்த்வம் தராதர : ।
த்வம் ஸுபர்ணஸ்ததா சக்ரம் த்வம் கதா சங்க ஏவச ॥



23. த்வம் ஸ்ரீ பிரபோ த்வம் புஷ்டிஸ்த்வம் மாலா தேவ சாச்வதீ ।
ஸ்ரீ வத்ஸ கௌஸ்துபஸ்த்வம் ஹி சார்ங்கீ த்வம் தேஷுதி : ॥

24. த்வம் தனேஸ்த்வம் ஈசான த்வம் இந்திரஸ்த்வம் அபாம்பதி ।
த்வம் ரக்ஷோதிபதி : ஸாதயஸ்த்வம் வாயுஸ்த்வம் நிசாகர : ॥

26. ஆதித்யா வஸவோ ருத்ரா அச்வினௌ த்வம் மருத்கணா : ।
தவம் தைத்யா தானவா நாகாஸ்த்வம் யக்ஷா ராக்ஷஸா ககா : ॥

27. கந்தர்வாப்ஸரஸ ஸித்தா பிதரஸ்த்வம் மஹாமரா : ।
பூதானி விஷயஸ்த்வம் ஹி த்வம் அவ்யக்தேந்திரியாணிச : ॥

28. மனோ புத்திரி : அஹங்கார : க்ஷேத்ரஞ்ஞஸ்த்வம் ஹ்ருதீச்வர : ।
த்வம் யஞ்ஞஸ்த்வம் வஷட்கார ஓங்கார ஸமித்குச : ॥

29. த்வம் வேதீ த்வம் ஹரே தீக்ஷாத்வம் யூபஸ்த்வம் ஹுதாசன : ।
த்வம் பத்னீ த்வம் புரோடாசஸ்த்வம் சாலா ஸ்ருக் ஸ்ருவ : ॥

30. கிராவாண ஸகலம் த்வம் ஹி ஸதயஸ்த்வம் ஸதக்ஷிண : ।
த்வம் கூர்பாதிஸ்த்வம் ச பிரம்மா முஸலோ லூகலே த்ருவம் ॥

31. த்வம் ஹோதா யஜமானஸ்த்வம் த்வம் தான்யம் பசுயாஜக : ।
த்வம் மத்வாயு த்வம் உத்காதா த்வம் யஞ்ஞ புருஷோத்தம : ॥

32. திக்பாலாமஹி வ்யோம த்யௌஸ்த்வம் நக்ஷத்ர தாரக : ।
தேவ திர்யங் மனுஷ்யேஷு ஜகதே தத் சராசரம் ॥

33. யத் கிஞ்சித் திருச்யதே தேவ பிரம்மாண்டமகிலம் ஜகத் ।
தவ ரூபமிதம் ஸர்வம் ஸ்ருஷ்டியர்த்தம் ஸம்பிரகாசிதம் ॥

34. நாதயந்தே பரம் பிரம்ம தேவைரபி துராஸ்தம் ।
கஸ்த்வாம் ஜானாதி விமலம் யோக கம்ய மதீந்திரியம் ॥



35. அக்ஷயம் புருஷம் நித்யம் அவ்யக்தம் அஜமவ்யயம் ।
பிரளயோத்பத்தி ரஹிதம் ஸர்வ வியாபின மீச்வரம் ॥

36. ஸர்வஞ்ஞம் நிர்குணம் சுத்தமானந்த மஜரம் பரம் ।
போதரூபம் த்ருவம் சாந்தம் பூர்ணமத்வைத மக்ஷரம் ॥

37. அவதாரேஷு யா மூர்த்திர்விதுரே தேவ திருச்யதே ।
பரம் பாவமஜானந்தஸ்த்வாம் பஜந்தி திவௌகஸ : ॥

38. கதம் த்வாமீத்ருசம் ஸூக்ஷ்மம் சக்னோமி புருஷோத்தமம் ।
ஆராதயிது மீசான மனோகமயம் அகோசரம் ॥

39. இஹ யந் மண்டலே நாத பூஜ்யதே விதிவத் கிரமை : ।
புஷ்ப தூபாதி பிர் யத்ர தத்ர ஸர்வா விபூதய : ॥

40. ஸங்கர்ஷணாதி பேதேன தவ யத் பூஜிதம் மயா ।
க்ஷந்துமர்ஹஸி தத்ஸர்வம் யத்கிருதம் ந கிருதம் மயா ॥

41. நசக்னோமி தத்ஸர்வம் யத்கிருதம் ந கிருதம் மயா ।
யத் கிருதம் ஜபஹோமாதி அஸாத்யம் புருஷோத்தம ॥

42. விநிஷ்பாத மிதம் பக்த்யா அதஸ்த்வாம் க்ஷமயாம்யஹம் ।
திவா ராத்ரௌ ச ஸந்த்யாயாம் ஸர்வாவஸ்தாஸு சேஷ்டத : ॥

43. அசலா து ஹரே : பக்தி : தவாங்க்ரி யுகளேமம ।
சரீரே ந ப்ரீதிர்நச தர்மாதி கேஷுச ॥

44. யதா த்வயி ஜகந்நாத பிரீதி ராத்யாந்திகீ மம ।
கிம் தேன ந கிருதம் கர்ம ஸ்வர்க மோக்ஷாதி ஸாதனம் ॥

45. யஸ்ய விஷ்ணௌ திருடாபக்தி : ஸர்வ காம பலபிரதே ।
பூஜாம் கார்த்தும் ததா ஸ்தோத்ரம் க : சக்னோதி தவாச்யுத ।
ஸ்துதம் பூஜிதம் மேத்ய தத்க்ஷமஸ்வ நமோஸ்துதே ।

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே



நாச்சியார் கோயில்
ஸ்ரீ கல் கருடன்